# மெட்ரோ ரயில்களில் கல்விச் சுற்றுலா: ஜூலையில் 9,375 மாணவர்கள் பயணம்

சென்னை, ஆக.3: மெட்ரோ ரயில்களில் கல்விச் சுற்றுலாவாக ஜூலை மாதத்தில் 9,375 மாணவர்கள் பயணம் மேற்கொண்டனர்.

சென்னை நகரில் மெட்ரோ ரயில் தொடர்பாக அரசுப் பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த மாதந்தோறும் கல்விச் சுற்றுலாவை நடத்த சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. சென்ட்ரலில் இருந்து விமானநிலையம் வரையிலும், ஏஜி டி.எம்.எஸ். முதல் விமான நிலையம் வரையிலும் கல்விச் சுற்றுலாவை மாணவ, மாணவியர் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். இதில், மெட்ரோ ரயிலின் சிறப்பு அம்சங்கள் பற்றி விளக்கப்படுகின்றன.

இந்நிலையில், 2018-19-ஆம் கல்வியாண்டில் கல்விச் சுற்றுலா மேற்கொள்ள அரசு, மாநகராட்சிப் பள்ளி மாணவ மாணவியருக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது. ஜூன் 21 முதல் ஆகஸ்ட் 3-ஆம் தேதி வரை மெட்ரோ ரயில்களில் 12,368 மாணவ, மாணவியர் பயணம் செய்துள்ளனர். ஜூலை மாதத்தில் மட்டும் 9,375 மாணவ, மாணவியர் மெட்ரோ ரயில்களில் பயணம் செய்துள்ளனர் என மெட்ரோ ரயில் நிர்வாகம் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.